## தலைப்பு 212 – பரீட்சைகள் திணைக்களம்

--------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்

கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவின் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை

2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அந்த தேவையில் இருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதியொன்று என காட்டப்பட்டுள்ள ரூபா 44,501,040 இற்கான பெறுமதியினை வெற்றாகக் காட்டுவதற்காக சுற்றறிக்கையின் பந்தி 7(VI) இன் பிரகாரம் கட்டுநிதி சீராக்கல் கணக்கு ஒன்று தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதி இணக்கக்கூற்று ஒன்று தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. | 2018 நிதிக்கூற்றுக்களுடன் சீராக்கல் கணக்கு ஒன்று (இணக்கக் கூற்று) சமர்ப்பிப்பதற்கு இயலாமல் போனது எனவும் பின்னர் தயாரித்து சமர்ப்பிப்பது எனவும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சுற்றறிக்கையின் மூலம் சமர்ப்பித்திருந்த ஏசீஏ 06 படிவத்தில் நிதி அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் ஒவ்வொரு நிலையான சொத்துக்களையும் வகைப்படுத்தி அந்த வகைப்படுத்தல் குறியீட்டின் கீழ் சொத்துக்களின் பெறுமதியை வெவ்வேறாக காட்டி உப கூட்டுத்தொகை காட்டப்பட வேண்டுமெனினும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில் அவ்வாறு வகைப்படுத்தல் குறியீட்டின் கீழ் சொத்துக்களின் பெறுமதி வெவ்வேறாக காட்டாமல் கூட்டுத்தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தது, | சுற்றறிக்கையின் மூலம் சமர்ப்பித் திருந்த படிவத்தின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமதி காட்டப்பட வேண்டியிருந்தது. | அவதானிப்புடன் இணங்குவதாகவும் மற்றும் 2018 ஆண்டிற்கான நிதிஅல்லாத சொத்துக்கள் மீதான கூற்றுக்களை நாளது வரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். |

### 1.6.2 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் காணப்பட்ட ஏசீஏ-எப் படிவத்தின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றில் இரண்டு பெறுவனவு விடயங்கள் ரூபா 182,593,185 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தமையால் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதி அதே தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்கு சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. | வருமானங்கள் அல்லாத பெறுவனவுகளின் கீழ் திறைசேரி கட்டுநிதி பெறுவனவுகள், வைப்புக்கு பெறுவனவுகள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு பெறுவனவுகள் காட்டப்பட்டுள்ளது எனவும் மற்றும் நிதி செயலாற்றல் கூற்றில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதியை சரிசெய்து சமர்ப்பிக்கப்படும் எனவும். |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி அறிக்கைகளில் மற்றும் நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில் ஒவ்வொரு சொத்துக்கள் தொடர்பாகவும் ஆண்டின் போது உரித்தாக்கியவை மற்றும் அப்புறப்படுத்திய பெறுமதிகளில் முறையே ரூபா 3,665,059,391 இற்கான மற்றும் ரூபா 4,288,223,166 இற்கான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. | ஆண்டின் போது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சொத்துக்கள் உரித்தாக்கல் மற்றும் அப்புறப்படு த்தல் மீதான சரியாக திறைசேரி க்கு அறிவிக்கப்பட வேண்டியிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குவது எனவும் எதிர்காலத்தில் சரிசெய்யப் படுவதாகவும். |
| (ஆ) | நிதி அல்லாத சொத்துக்கள் மீதான கூற்றில் காணிகள் என ரூபா 630,000,000 இற்கான பெறுமதி ஒன்று குறிப்பிட்டிருந்த போதிலும் இது வரை நிறுவனத்தின் காணி திணைக்களத்திற்கு உரித்தாக்கு வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணியை திணைக் களத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த சிக்கலை தீர்ப்பதற்காக கல்வி அமைச்சினால் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும். |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுடன் காணப்பட்ட ஏசீஏ-சீ படிவத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காசு உள்பாய்ச்சல் 03 விடயங்கள் ரூபா 32,383,237 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்ததுடன் 03 காசு வெளிப் பாய்ச்சல் விடயங்கள் ரூபா 52,498,750 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | அரச கணக்கு சுற்றறிக்கை 267/2018 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 இலக்கங் கொண்ட அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏசீஏ-சீ படிவத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் 01 காசு வெளிப்பாய்ச்சல் விடயம் ரூபா 30,374,633 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன் காசு வெளிப் பாய்ச்சல் 02 விடயங்கள் ரூபா 54,507,355 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடம் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 473,367 இற்கான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு இயலாதிருந்தது. | கடன் தொகையொன்று திருப்பி செலுத்தி முடிவடைவதற்கு முன்னர் ஓய்வு பெறும் மற்றும் இறப்பு எய்தும் அல்லது சேவையை முடிவுறுத்திய உத்தியோகத்தர் ஒருவரின் கடன் மீதிகள் தொடர்பாக தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் பிரிவு 4 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகள் கடைபிடிக்கப்பட வேண்டும். | வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத் தர்களிடம் அறவிடப்பட வேண்டிய மீதியை உறவினர்களிடம் மற்றும் பிணையாளர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும். |
| (ஆ) | 1995 முதல் 2008 வரையான காலப்பகுதியில் சேவையை விட்டுச் சென்றிருந்த மூன்று உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 113,351 இற்கான கடன் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்த்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | தாபனக் கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் பிரிவு 4 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளை கடைபிடிக்கப்பட வேண்டியிருந்தது. | சேவையை விட்டு சென்றிருந்த உத்தியோகத்தர்களிடம் அறவிடப் பட வேண்டிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும். |

**1.6.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

திணைக்களத்தின் கீழ் குறிப்பிட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைப் பிரகாரம் மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) நிலையான சொத்துக்கள் பதிவேடு** | | |
| 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை/ நிதிப்பிரமாணம் 502(2) இன் பிரகாரம் அதன் 11 ஆம் அனுபந்தத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்க வில்லை. | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) பிரகாரம் அதன் 11 ஆம் அனுபந்தத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்வதாகவும் எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். |
| **(ஆ) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளது வரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் சொத்துக்களை தொடர்ச்சியாக பரிசோதனை செய்யக் கூடிய விதமாக பொறுப்புக்கள் பதிவேடு ஒன்றில் அந்த பொறுப்புக்களை பதிவு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்படும் எனவும். |

### 1.6.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 94(i) | வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடுகள் காணப்பட்டால் அன்றி ஏதேனும் வேலை ஒன்று அல்லது சேவை ஒன்று அல்லது வழங்கல்களுக்காக செலவுகள் எதற்கும் அல்லது கடப்பாடு ஒன்றிற்கு கடப்படக் கூடாது எனினும் 08 செலவு விடயங்களுக்கான ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 75,299,777 இற்கான பொறுப்புக்களுக்கு கடப்பாடு ஏற்படுத்திக் கொண்டிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டியுள்ளது. | பரீட்சை அலவல்களின் தேசிய தேவையினை கவனத்தில் எடுத்து இந்த கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும். |
| (ii) நிதிப் பிரமாணம் 396(ஈ) | 02 கணக்குகள் தொடர்பாக வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்துள்ள ரூபா 786,168 தொகை பெறுமதியான 949 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டி இருந்தது. | இந்த காசோலைகள் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுத்திய உத்தியோகத்தர்களுக்கு செலுத்தியவை எனவும் தற்போது கொடுப்பனவுகள் முடிந்த அளவு தீர்க்கப்பட்டுள்ளது எனவும் |

| | | | |
|---|---|---|---|
| (iii) நிதிப் பிரமாணம் 751(5) | இருப்புக்களுக்கு சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுத்து பண்டங்களுக்கு போதிய அளவு பாதுகாப்பு ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டி இருந்த போதிலும் அச்சு களஞ்சியம் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் செயற்பட்டு இருப்புக்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் | போதியளவு இடவசதி காணப்படாமையால் திறந்த நிலைமை ஏற்பட்டிருந்ததெனவும் புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் இந்த சிக்கல் தீர்க்கப்பட்டுவிடும் எனவும். |
| (iv) நிதிப் பிரமாணம் 751(4) | இருப்புப் பதிவுகள், இருப்பு காட்கள் ஆகியவற்றுடன் இணக்கஞ் செய்து வசதியாகவும் விரைவாகவும் சரி பிழை பார்க்கக் கூடிய விதமாக பண்டங்கள் முறைப் பிரகாரம் தயாரித்து வைத்திருக்க வேண்டும். எனினும் ஒவ்வொரு களஞ்சிய விடயங்கள் தொடர்பாகவும் பின் காட் முறைமை அல்லது அதற்கு சமமான முன்னேறிய வேறு நடைமுறை ஒன்றில் பதிவு செய்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு முறையான இருப்பு கட்டுப்பாடு ஒன்றினை பேணப்படல். | இது தொடர்பாக மென்பொருள் ஒன்று அபிவிருத்தி செய்யப்பட்டு இருப்பதாகவும். |
| (v) நிதிப் பிரமாணம் 762 | தேவையான பண்டங்கள் மாத்திரம் இருப்புக்கள் வைத்திருப்பதற்கும் தேவையை விட கூடுதலாக இருப்பு வைத்திருக்காமல் இருப்பற்கு கவனம் செலுத்த வேண்டும். எனினும், கடந்த இரண்டு வருடங்களை ஒப்பிட்டு பார்த்த போது 18 இருப்பு விடயங்களில் தேவையை விட கூடுதலாக இருப்பு ஒன்று பேணப்பட்டிருந் ததுடன் 46 களஞ்சிய விடயங்களில் 1 வருடம் முதல் 7 வருடங்கள் வரையான காலம் முதல் பயன்படுத்தியிருக்க வில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட்டு வினைத் திறனுள்ள இருப்புக் கட்டுப்பாடு ஒன்று பேணப்படல். | பயன்படுத்தப்படாத பண்டங்கள் முன்வரும் இரண்டு வாரங்களில் அப்புறப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமானங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திட்டமிடப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை யின் படி மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் என ரூபா 350 மில்லியன் ஆரம்ப மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் பின்னர் ஆரம்ப வருமான மதிப்பீடு ரூபா 100 மில்லியனினால் அதிகரித்து திருத்தப்பட்டிருந்ததுடன் திருத்திய மதிப்பீடுகளில் 64 சதவீதமான வருமானத் தொகையொன்று மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சேகரித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | வருமான மதிப்பீடுகள் நடைமுறை சாத்தியமாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி யிருந்தது. | திறைசேரியினால் மதிப்பீடுகள் திருத்தப்பட்டிருந்தது எனவும். |

### 2.2 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த மதிப்பீடுகள் தயாரிக்கும் போது தேவையினை சரியாக இனங்காணல் குறிப்பிட்ட திட்டமொன்றின் பிரகாரம் செயற் படாமையால் 11 செலவு விடயங்கள் தொடர்பாக 15 சதவீதம் முதல் 90 சதவீதம் வரையான வீச்சில் ரூபா 159,861,267 இற்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் முறையான திட்ட மொன்று மற்றும் முகாமைத்துவத்துடன் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | 2018 ஆண்டின் இறுதிக் காலாண்டில் கட்டுநிதி வழங்குதல் விண்ணப்பித்த தொகை கிடைக்காமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டது எனவும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை அணுகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் கடப்பாடுகள் என காட்டப்பட்டிருந்த ரூபா 350,663 இற்கான கடப்பாட்டு மீதி ஒன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | வருட இறுதியில் பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்து கொள்வேன் எனவும். |
| (ஆ) | கடப்பாடுகள் அட்டவணைகளின் பிரகாரம் கடப்பாடுகள் என காட்டப்பட்டுள்ள ரூபா 300,000 இற்கான மீதியொன்று கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உட்படுத்தியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் ரூபா 209,934 தொகை என பதியப்பட வேண்டிய பொறுப்பு ஒன்று ரூபா 335,666 தொகை என ரூபா 125,732 மிகையாகப் பதியப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்தவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) **தனிப்பட்ட பெறுபேற்று சான்றிதழ்கள் மாணவர்களிடையே வினியோகித்தல்** | | |
| (i) பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் மாணவர்களின் தனிப்பட்ட பெறுபேற்று சான்றிதழ்கள் மாணவர்களுக்கு விரைவாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி எழுத்துமூல அறிவுரை வழங்கப்பட்டு பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்ட போதிலும் கொழும்பு மாவட்டத்தில் 09 பாடசாலைகளில் 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர் தரம் 16,368 பரீட்சை சான்றிதழ்கள் மாணவர் களுக்கு வினியோகிக்காமல் பாடசாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தினால் இது தொடர்பாக அதிபர்களுக்கு அறிப்படுத்த வேண்டியிருந்தது. | ஏற்றுக்கொள்வதாகவும் இது தொடர்பாக அதிபர்களுக்கு அறியப்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் |
| (ii) பரீட்சை திணைக்களத்தினால் மாணவர்களுக்கு வினியோகிப் பதற்காக பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் இந்த பெறுபேற்றுச் சான்றிதழ் முறைப் பிரகாரம் மாணவர்களுக்கு ஒப்படைத்தல் தொடர்பாக திணைக்களத்தினால் தொடர் செயல் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திணைக்களத்தினால் இது தொடர்பாக மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | ஏற்றுக்கொள்வதாக தொடர் செயல் நடவடிக்கை எடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் |

| | | | |
|---|---|---|---|
| (iii) | க.பொ.த.(சாதாரண தர) மற்றும் க.பொ.த. (உயர்தர) பரீட்சைகளின் பெறுபேறுகளின் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வதற்காக நாளாந்தம் மிகவும் கூடிய எண்ணிக்கையானவர்கள் பரீட்சை திணைக்களத்திற்கு வருவதாக அவதானிக்கப்பட்டதுடன் திணைக்களத்தினால் பணம் அறவீடு செய்து வழங்கப்படும் உயர்ந்த மேன்மையுள்ள பெறுபேற்று சான்றிதழ் அல்லது அதற்கு சமமான சான்றிதழ் ஒன்று பாடசாலைகளின் மூலம் இலவசமாக மாணவர்களின் கைகளுக்கு வழங்கப்படாமையே இதற்குக் காரணமாகியுள்ளது என அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தினால் க.பொ.த (சாதாரண தரம்) மற்றும் க.பொ.த (உயர் தரம்) பரீட்சைகளின் பெறுபேற்று சான்றிதழ்கள் உயர்ந்த பண்புசார் தன்மையுடன் மாணவர்களின் கைகளுக்கு கிடைக்க நடவடிக்கை எடுத்தல். | 2019 ஆண்டு முதல் 2019 க.பொ.த(உயர் தர) மற்றும் க.பொ.த(சாதாரண தர) பரீட்சைகளின் பெறுபேறுகள் வழங்கும் போது இந்த சான்றிதழ்கள் இலவசமாக வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் |

**(ஆ) அச்சக களஞ்சியம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 37 களஞ்சிய விடயங்களை பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு பயன்பாட்டிலிருந்து அகற்றுவதற்கு காரணமாக இருந்தது. அந்த பொருட்களை பயன்படுத்துவதற்கு தேவையான இயந்திரங்கள் பயன்பாட்டில் காணப்படாமையே என அவதானிக்கப்பட்டது. | பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி இயந்திரங்களுக்கு தேவையான விடயங்களை கொள்வனவு செய்தல். | பயன்படுத்தப்படாத பண்டங்கள் எதிர்வரும் மூன்று இரண்டு வாரங்களில் அப்புறப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். |
| (ii) | இவ்வாறு அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த சாயங்கள் மற்றும் டோனர் வகைகள் காலவதியாக முன்னர் விற்பனை செய்து நட்டத்தை குறைப்பதற்கு கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு செய்யாமையினால் 5 வருடங்கள் முதல் 7 வருடங்கள் வரையான காலம் அவ் விடயங்கள் விளைவற்றுக் களஞ்சியப்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. | காலவதியாகிய மற்றும் பயன்படுத்தப்படாத விடயங்கள் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. | பயன்படுத்தப்படாத பண்டங்களை எதிர்வரும் இரண்டு வாரங்களில் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். |

(இ) **பரீட்சைகள் தொடர்பாக கிடைக்கும் முறைப்பாடுகள் பற்றிய விசாரணை**

-------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| (i) கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட 43 முறைப்பாடுகளில் 2015 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை சமர்ப்பித்திருந்த 17 முறைப்பாடுகளின் விசாரணை விடயங்கள் 2019 ஏப்ரல் 30 திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டு இருக்காததுடன் 05 முறைப்பாடுகளின் விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதனோடு தொடர்புடைய இறுதி அறிக்கை வெளியிட்டிருக்க வில்லை. | விசாரணை அலுவல்கள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டியிருந்தது. | விசாரணைகள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் 05 முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும். |
| (ii) 2017 இலங்கை கணக்காளர் சேவையின் III தரத்திற்கு ஆள்சேர்ப்பதற்காக வரையறுக்கப்பட்ட/ திறந்த போட்டிப் பரீட்சையில் கணக்காய்வு மற்றும் நுண்ணாய்வு வினாப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வினாக்களில் அனேக எண்ணிக்கையான வினாக்களை உள்ளடங்கிய முற்பயிற்சி வினாப்பத்திரமொன்று வெளியிடுதல் தொடர்பாக முறைப்பாட்டாளர் ஒருவரினால் விடயங்கள் கோவைப்படுத்தப்பட் டிருந்தது. தனியார் நிறுவனம் ஒன்றினால் வழங்கியிருந்த இந்த முற்பயிற்சி வினாத்தாள் பழைய பரீட்சை வினாத்தாள்களில் இருந்து பெற்றிருந்த வினாக்கள் மூலம் தயாரித்திருந்தது என விசாரணைகளின் போது கண்டறியப்பட்டது. இவ்வாறு மேற்கூறிய பரீட்சை தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த வினாப்பத்திரங்களில் அனேக எண்ணிக்கையான வினாக்கள் கடந்தகால பரீட்சை வினாக்கள் மூலம் பெற்று தயாரிக்கப் பட்டிருந்ததென உறுதிப்படுத்தப் பட்டிருந்தமையால் நிறுவனத்தில் வினாப்பத்திரங்கள் தயாரித்தல் | முறைசார் விதமாக விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | அந்த கோவைகளின் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். |

| | | |
|---|---|---|
| மற்றும் அதற்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளல் தொடர்பாக திணைக்களத்தின் கட்டுப்பாடு திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. | | |
| (iii) 1968 இன் 25 ஆம் இலக்க பகிரங்க பரீட்சை சட்டத்தின் பிரகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றினை மாற்றம் செய்தல் தொடர்பாக குற்றவாளி ஆகும் ஆள் ஒருவருக்கு எதிராக சட்டத்தின் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும் 1999 சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய விண்ணப்பதாரி ஒருவர் போலியான பெறுபேற்று சான்றிதழ் ஒன்று தயாரித்திருந்த குற்றச்சாட்டின் மீது குற்றவாளி என விசாரணைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என இது தொடர்பாக மேற் கொள்ளப்பட்ட தெரிவுக் கணக் காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | பரீட்சை சட்டத்தின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டியிருந்தது. | இங்கு குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பாக தொடர்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கை களுக்காக சான்றிதழ் கிளைக்கு கோவை 2018 பெப்ரவரி 19 திகதி அனுப்பப்பட்டது எனவும். |
| (iv) பரீட்சை மண்டபத்தில் பரீட்சாத்தி கள் வைத்திருந்த 604 கையடக்கத் தொலைபேசிகளை உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு எடுத்து தடுத்து வைத்திருந்ததுடன் அவற்றில் 481 தொலைபேசிகள் 2014 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப்பகுதியில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்புடைய தொலைபேசிகள் என அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் இந்த விசாரணைகளை துரிதப்படுத்தி குறிப்பிட தொலைபேசிகள் தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கையடக்கத் தொலைபேசிகள் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுக்க வேண்டியிருந்தது. | கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பாக தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் எனவும். |

(ஈ) **பெறுபேறுகளை உறுதிப்படுத்தும்**

**அலுவல்கள்**

-----------------------------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெறுபேறுகளை உறுதிப்படுத்து வதற்காக வருடாந்தம் பெறுபேறுகளை உறுதிப்படுத்தல் கள் 111,500 ஐ விட மிகையான எண்ணிக்கை ஒன்று கிடைப்பதுடன் இந்த பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் அலுவல்கள் மற்றும் ஒரு நாள் சேவை, பொதுவான சேவையின் மூலம் சான்றிதழ்கள் வழங்குதல் ஆகிய அனைத்து கருமங்களும் ஒரே பதவியணியினால் மேற்கொள்ளப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | பதவியணியினை முறைப்பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தி பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் அலுவல்கள் விரைவுபடுத்தப்பட வேண்டியிருந்தது. | கடமைத் தேவைகளின் பிரகாரம் முறையான திட்டமொன்றின் படி சான்றிதழ்கள் கிளையில் நிரந்தர பதவியணியினை இந்த அலுவல்களுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்ததெனவும் |
| (ii) | ஒரு நாள் சேவையின் ஊடாக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வதற்காக ஒரு நாளைக்கு பாரிய எண்ணிக்கையான ஆட்கள் வருவதினால் சான்றிதழ் கிளையின் உத்தியோகத்தர்களில் கூடிய எண்ணிக்கையினர் ஒரு நாள் சேவை கரும பீடத்தின் அலுவல்களுக்காக ஈடுபடுத்தப் பட்டிருந்தனர். இதன் காரணமாக பெறுபேறுகள் சான்றுபடுத்தும் கருமங்களுக்காக போதியளவு எண்ணிக்கையான பதவியணி யினை ஈடுபடுத்து வதற்கு முடியாதிருந்ததுடன் அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதி அளவில் 10,660 இற்கான உறுதிப்படுத்தல்கள் மேற் கொள்வதற்கு முடியாதிருந்தது. | பெறுபேறுகள் உறுதிப்படுத்தும் அலுவல்கள் துரிதப் படுத்தும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | திணைக்களத்தினால் இந்த சிக்கல் தன்மையுள்ள நிலைமையை குறைப்பதற்காக வலயக் கல்வி அலுவல்கத்தின் பெறுபேறுகளை உறுதிப் படுத்தும் அலுவல்களுக்காக நிகழ்வு நிலை பெறுபேறுகள் உறுதிப்படுத்தும் முறை (Online Results Confirmations) இன் கீழ் பெறுபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 5/2018 சுற்றறிக்கையின் மூலம் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. |
| (iii) | பெறுபேறுகளை உறுதிப்படுத்து வதற்காக 03 மாதங்களை விட மிகையான காலம் கடந்துள்ள சந்தர்ப்பங்கள் அவதானிக்கப் பட்டதுடன் இந்த கால தாமதத்தின் காரணத்தினால் உத்தியோகத்தர்களிடம் பதவி உயர்வுகள் நிரந்தரப்படுத்தல்கள், மற்றும் மாற்றம் செய்தல்கள் தாமதம் அடைந்திருந்ததென அவதானிக்கப்பட்டது. | பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் அலுவல்களை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. | பெறுபேறுகள் உறுதிப்படுத்தும் காலத்தை குறைப்பதற்காக சான்றிதழ் கிளையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களினால் தற்போது முறையான மேற்பார்வை வேலைத் திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கிறது எனவும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ''2030 நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக திணைக்களம் அறிந்திருந்த போதிலும் அதன் கருமங்கள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய வேலைத் திட்டத்தை திட்டங்களில் உட்படுத்தி அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்பு முனைகளும் இலக்குகளை நெருங்குவதை அளவை செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2030 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் படி திணைக்களத் திற்கு பொருந்துவது பண்புசார் கல்வி என்ற இலக்கு எனவும் மற்றும் அந்த இலக்கிற்கு உரிய சுட்டிகள் தயாரிக்கப்படுவது கல்வி அமைச்சு மற்றும் அதனோடு இணைந்துள்ள அனைத்து நிறுவனங்களின் கூட்டிணைப்புடனாகும் எனவும் |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரகசியத் தன்மையை உச்ச மட்டத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய கிளை ஒன்றான தரவு பதிவுகள் கிளைக்காக முறைப் பிரகாரம் நிரந்தர தரவு உதவியாளர் பதவியணி ஒன்று சேர்த்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் படாமல் தரவு உதவியாளர் பதவியின் கடமையாகிய பரீட்சை விண்ணப்பப்பத்திர தகவல்கள் பதிவு செய்தல், பரீட்சைகளின் புள்ளிகளை பதிவு செய்தல் போன்ற அலுவல்களுக்காக அமைய அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 19 ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும் தரவு பதிவுகள் இயக்குனர்கள் என அமைய அடிப்படையில் ஆள்சேர்ப் பதற்காக 26 பேர்கள் கொண்ட பெயர்பட்டியல் ஒன்று கல்வி அமைச்சு செயலாளரின் | தரவுகள் பதிவுகள் கிளைக்காக தரவு உதவிப் பதவியணி ஒன்றினை சேர்ப்பதற்காக உரிய இயலுமையை கண்டறிய வேண்டியிருந்தது. | கணிப்பீட்டு சபையினர் இறுதி புள்ளிகள் தீர்மானிக்கப்படுவதால் புள்ளி செயற்திட்டங்களில் வழமையற்ற நிலைமை யொன்று அவதானிக்கப் பட்டமையால் 2018 ஆண்டு முதல் க.பொ.த (உ.தரம்) மற்றும் க.பொ.த (சா.தரம்) பரீட்சைகளின் I பத்திரம் மற்றும் II பத்திரத்தின் புள்ளிகள் வெவ்வேறாக உட்படுத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டது. அங்கு உட்படுத்தப்பட வேண்டிய தரவுகளின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்திருந்தமையினால் தரவுகள் பதிவு செய்யும் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையொன்று ஏற்பட்டது. இந்த விடயத்தை துரிதப்படுத்து வதற்காக தற்காலிகமாக அமைய அடிப்படையில் இவ்வாறு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டதெனவும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2016 ஆண்டின் போது ரூபா 714,240 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப் பட்டு 43 பரீட்சை தரவு உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு எழுத்துமூலம் பரீட்சை ஒன்று, செய்முறைசார் தேர்வு ஒன்று மற்றும் நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டிருந்தது. அங்கு 43 பேர்கள் முறைசார் விதமான தகைமைகளை பூர்த்தி செய்திருந்த போதிலும், கல்வி அமைச்சு செயலாளரின் கட்டளை ஒன்றின் மீது 06 பேர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருநதனர். | தரவுகள் பதிவு கிளைக்கு நிரந்தர தரவு உதவிப் பதவியணி ஒன்று ஆட்சேர்ப்பதற்கான இயலுமையை கண்டறிதல் | கல்விச் செயலாளரின் அங்கீகாரத்துடன் இந்த 06 பேரும் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீதியானோரை சேர்ப்பதற்கு அவ்வாறான அங்கீகாரம் ஒன்று கிடைத்திருக்கவில்லை எனவும். |
| (இ) | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம் தரவு உதவியாளர் பதவிக்காக 49 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் உள்ளவாறான பதவியணி 09 பேர் மாத்திரம் என அவதானிக்கப் பட்டதுடன் மீதியான 40 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தரவு உதவியாளர் பதவியில் உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. | திணைக்களத்தின் தரவு பதிவு உதவியாளர் வெற்றிடங்களை நிரப்பு வதற்காக அங்கீகாரம் வழங்கும் படி கல்வி அமைச்சுச் செயலாள ருக்கு கோரிக்கை கடிதம் ஒன்று சமர்ப்பித் திருந்ததுடன் தற்போது அதன் ஆட்சேர்ப்பு நடைமுறையில் சில திருத்தங்கள் மேற்கொள் ளப்படுவதினால் அவை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் |
| (ஈ) | திணைக்களத்தில் அலுவல்களை டிஜிடல் மயமாக்கும் செயற்திட்டத்தின் கீழ் தரவு உதவியாளர் கிளைக்கு தரவு பதிவுகள் இயக்குனர் என சேர்க்கப்பட்டிருந்த 12 அமைய ஊழியர்களின் சேவைக் காலத்தை தாபனக் கோவையின் அத்தியாயம் IV பந்தி 03 இற்கு முரணாக இடையறாமல் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்தது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேவை துண்டிக்கப்பட வேண்டியிருந்தது. | 2018 க.பொ.த(உ.தர) மற்றும் க.பொ.த (சா.தர) தரத்திற்காக தற்காலிக மாக அமைய அடிப்படை யில் அவர்கள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன் மீண்டும் 2019 க.பொ.த (உ.தர) மற்றும் க.பொ.த. (சா.தர) பரீட்சைகளை துரிதப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் அமைய அடிப்படை நியமனம் செய்யப்பட்டு சேவை துண்டிப்பு ஏற்படக் கூடிய வகையில் 2019 மே 15 திகதி புதிதாக அமைய நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டி ருந்தன எனவும் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திணைக்களத்திற்கு வருடாந்தம் பரீட்சைகள் தொடர்பான முறைப்பாடுகள் 2500 ஐ விட கூடுதலான எண்ணிக்கை கிடைப்பதுடன் இந்த முறைப்பாடுகள் முறைப் பிரகாரம் விசாரணை மேற்கொள்வதற்கான விசாரணை உத்தியோகத்தர் களுக்கு முறையான பயிற்சி ஒன்று வழங்கியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது, | விசாரணை உத்தியோகத்தர் களுக்கு முறையான பயிற்சி ஒன்று வழங்க வேண்டும். | விசாரணை உத்தியோகத்தர்களுக்கு முறையான பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2019 மே 22 திகதி நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ள்ளது எனவும். |